# ஆரம்ப பிள்ளைப் பருவ விருத்திக்கான

## வீட்டை அடிப்படையாகக் கொண்ட செயல்முறைகள்



### ஐந்தாம் புத்தகம்

### விருந்தினர் வரவு

பெண்கள் விவகார அமைச்சு
சிறுவர் செயலகம்
யுனிசெப் அனுசரணையுடன்

மறுபதிப்பு - 2005
அனுசரணை - சிறுவர் பாதுகாப்பு ஸ்ரீலங்கா

# முன்னுரை

குழந்தை பிறந்த நேரந் தொடக்கம் தன் சூழலுக்கு இசைவான முறையில் துரிதமாக வளர்கிறது. அதன் அறிவு, அடிப்படை ஆற்றல்கள், எண்ணங்கள் என்பனவும் படிப்படியாக விருத்தியடைகின்றன. பெற்றோர், பெரியோர், அயல் அட்டச் சூழல் ஆகியன அதன் விருத்திக்குத் துணைபுரிகின்றன.

ஆயினும் மேற்சொன்ன வளங்களைக் குழந்தை பயனுள்ள முறையில் உபயோகிப்பதற்கு அக் குழந்தையின் அறிவாற்றல் செம்மையான முறையில் நெறிப்படுத்தப்படல் வேண்டும். இது விடயத்தல் பாலர் பாடசாலைகள் கணிசமான பங்காற்றுகின்றன. ஆயினும் இலங்கையில் பாலர் பாடசாலைக்குச் செல்லும் வாய்ப்பற்ற பிள்ளைகள் தொகை பெரிதாகும். ஆகவே, பெற்றோர் தம் குழந்தைகளின் விருத்தியைச் செவ்வனே நெறிப்படுத்துவதற்கு ஏற்றவாறாக வீட்டைப் பகைப்புலமாகக் கொண்ட உணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தல் அவசியம்.

போக்குவரத்து, சுற்றாடல், மகளிர் விவகார அமைச்சின் சிறுவர் செயலகம் இந்தத் தேசிய தேவையைநிறைவேற்ற முற்பட்டுள்ளது. பெற்றோர் மத்தியில் இது தொடர்பான உணர்வை ஏற்படுத்தும் பொருட்டு எட்டுச் சிறு நூல்களை அது உருவாக்கியுள்ளது.

இது தொடர்பாக யுனிசெப் எமக்களித்த உற்சாகத்துக்கும் உதவிக்கும் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இத்துறையில் தேர்ச்சி பெற்ற திறனாளர்களின் பங்களிப்புக்கும் வீட்டைப் பகைப்புலமாகக் கொண்ட செயற்பாடுகளை வெளி இடங்களில் பரீட்சிப்பதற்கு ஒத்தாசை புரிந்த வெவ்வேறு அமைப்புகளின் ஆதரவுக்கும் எம் நன்றி உரித்தாகுக.

பெற்றோர் தம் குழந்தைகளின் பூரண விருத்தியை ஊக்குவிப்பதற்கு இந் நூல்கள் வழிகாட்டுமென நம்புகிறோம்.

**டீற்றா விமலசிறி**
மேலதிக செயலாளர்
மகளிர் பிரிவு

# சிறுவர் செயலகத்தின் பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் ஆரம்பப் பராய சிறு வயதிலுள்ள பிள்ளைகளின் பூரண அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் செயல்களை இணைக்கும் நிறுவனமாக நடவடிக்கைகள் மேற்கொள்வதே சிறுவர் செயலகத்தின் பொறுப்பாகும்.

இவ்வுலகில் பிறக்கும் குழந்தையை சிறந்த ஒரு பிரஜையாக உருவாக்குவதற்கு ஆரம்ப அடித்தளமாக இருப்பது வீடே. ஒரு நாளைக்கு வெறும் நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே சிறுவர் நிலையத்தில் கழிக்கின்றன. மிகுதியான அதிக நேரங்களை வீட்டிலேயே கழிக்கும் பிள்ளைகளின் பூரண அபிவிருத்திக்கான பாரிய பொறுப்பு பெற்றோரின் கைகளிலேயே தங்கியுள்ளது.

பெற்றோர்கள் மற்றும் முதியோர்கள் நாளாந்த வீட்டுவேலைகளில் ஈடுபடும் போது தேவைக்கேற்ப சிறுவர்களையும் அவ்வேலைகளில் சேர்த்துக்கொண்டும் அவர்களுடன் உரையாடிக்கொண்டும் அவர்களுக்கு உற்சாகத்தைப் பெற்றுக்கொடுப்பதும் மிகவும் முக்கியமாகும்.

1993 ஆம் ஆண்டு தொடக்கம் சிறுவர் செயலகத்தால் நடாத்தப்பட்ட ஆய்வின்படி 1996 ஆம் ஆண்டின் ''யுனிசெப்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட ஆரம்ப பருவ சிறுவர் அபிவிருத்திக்கு வீட்டில் செய்யும் செயற்பாடுகள் என்ற நூல்கள் பிரயோசனமாக அமைந்துள்ளன.

மற்றைய நாட்களை விட பிள்ளைகளை பற்றி பெற்றோரையும் முதியோர்களையும், மேலும் மேலும் அறிவூட்ட வேண்டிய காலகட்டத்தில் இந்நூல்களை மீண்டும் அச்சிட்டு வீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பப் பருவ விருத்தி வேலைத்திட்டத்தை அமுல்படுத்த முன்வந்த இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்திற்கும், இந்நூல்களை வெளியிட துணைப்புரிந்த திருமதி மயூரா குணசிங்க அவர்களுக்கும் செல்வி. அமரா அமரசிங்க அவர்களுக்கும் யுனிசெப் நிறுவனத்திற்கும், ஆய்வு செய்வதற்கு உதவியாக இருந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**வினித்தா வீரசேகர**
பணிப்பாளர்
சிறுவர் செயலகம்
சமூக நல அமைச்சு

# அறிமுகம்

பெற்றோரே தம் பிள்ளைகளுக்கு முதலாவது ஆசிரியர்கள். ஒரு குழந்தை தன் புலன்கள் மூலமாகப் பெறும் ஆரம்ப அனுபவங்கள் அர்த்தமுடையனவானால் அக் குழந்தையின் விருத்தி அவற்றால் தாக்கம் பெறும். குழந்தையின் எதிர்கால விருத்தியின் முன்னேற்றம் அது முதிர்ச்சியடையும் வேகத்தைப் பொறுத்தே அமையும்.

ஓர் இருப்பிடத்தில் உள்ளோர், அந்த இருப்பிடத்தின் நடவடிக்கைகள், அங்குள்ள வாய்ப்பு, வசதிகள் என்பன குழந்தையின் அறிவு விருத்தியடைதற்கு வழி வகுக்கின்றன. இந்த வாய்ப்புகள் புலன் வழி உணர்வுகளையும் அனுபவங்களையும் குழந்தை அறிந்து கொள்ள உகந்த முறையில் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

வாய்ப்புகளும் வளங்களும் போதிய அளவில் கிடைத்தால் மட்டும் விருத்தி ஏற்பட்டுவிடாது. அந்த வாய்ப்புகளுடனும் வளங்களுடனும் குழந்தை உறவாடுதல் மூலமே குழந்தை புலன் வழி அனுபவங்களைக் கற்றுக் கொள்கிறது. முன்னர் பெற்ற ஓர் அனுபவத்துடன் தொடர்புபடுத்துவதன் மூலமே புதிய அனுபவங்களைக் குழந்தை கற்றுக்கொள்கிறது. பெரியவர்களின் பராமுகமும் புதிய அனுபவங்களைப் பெறும் வாய்ப்புகள் இல்லாமையும் குழந்தையின் இடர்ப்பாட்டுக்கும் விருத்தி குறைவடைவதற்கும் ஏதுவாகலாம்.

ஒரு குழந்தையின் அறிவு விருத்திக்கு, அதன் பிறப்பிற்கும் முதன் முறை பாடசாலை செல்வதற்கும் இடைப்பட்ட காலம் மிக முக்கியமானதாகும். விருத்தியடையும் இந்தப் பருவத்திலே பெற்றோர் முக்கிய பங்கேற்க வேண்டியது அவசியம்.

இந்த எட்டுச் சிறு நூல்களிற் கொடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் பெற்றோர் தம் குழந்தைகளை இலகுவான மனை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வதற்கும் அவை பற்றி உரையாடுவதற்கும் உதவும். அவற்றின் மூலம் பிள்ளைகள் அறிவையும் அடிப்படை ஆற்றல்களையும் நல்ல பழக்க வழக்கங்களையும் கற்றுக்கொள்ள வாய்ப்பேற்படும். வீட்டிலே மேலும் பல நடவடிக்கைகள் இடம் பெறலாம். அவை எல்லாமே இவ்வாறு பயன்படத்தக்கவை. குழந்தையின் விருத்தி எவ்வாறு படிப்படியாக நிகழ்கிறதென்பதைப் பெற்றோர் நேரிற் காணும் வாய்ப்பினைப் பெறுகிறார்கள். பிள்ளை பாலர் பாடசாலைக்குப் போனாலும் போகாவிட்டாலும் விருத்தி நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. எனினும் **இதனை உணர்ந்து பிள்ளையின் விருத்திக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் பெற்றோர் கடமையாகும்.**

வீட்டைப் பின்புலமாகக் கொண்ட இந்தச் செயற்திட்டம் முறையான பாடசாலையிற் சேரமுன் பாலர் பாடசாலையிற் பயிலும் வாய்பற்ற பிள்ளைகளுக்கு நல்ல அனுபவங்களையும் அடிப்படை அறிவையும் நல்ல பழக்க வழக்கங்களையும் புகட்டும் நோக்கத்துடன் தொடக்கப்பட்டதாகும்.

பாலப் பருவப் பிள்ளையின் விருத்திக்கென வீட்டைப் பின்னணியாகக் கொண்ட செயற்பாடுகள் அடங்கிய முதல் எட்டுப் புத்தகங்களும் பாலப் பருவப் பிள்ளையின் விருத்திக்கான செயற்திட்டமாகச் சிறுவர் செயலகத்தினால் முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளைக் கிராமப் பகுதிகளில் உள்ள பிள்ளைகளோடு பரீட்சித்துப் பார்ப்பதற்கு தொண்டர் தாபனங்கள், அரசாங்க நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்த பதினெட்டு அனுசரணையாளர்களும் கிராமிய மட்ட மத்தியஸ்த தொண்டர்களும் பெரிதும் உதவினார்கள்.

**புத்தகங்களின் முதற் பகுதியில்**

1) இளம்பிள்ளைகள் பற்றி மனத்திருத்த வேண்டிய உண்மைகளும்

2) பெற்றோருக்கு உணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடத்திக் காண்பிக்கும் பயிற்சி உத்தியோகத்தர்களுக்குப் பயனுள்ள உண்மைகளும் அடங்கியுள்ளன.

**செயற்பாடுகள்:** இரண்டு வயது மட்டப் பாலகர்களுக்கு உகந்த, வீடு சார்ந்த செயற்பாடுகள் (மூன்று வயதுக்கு உட்பட்டவர்களும் மூன்று வயதுக்கு மேற்பட்டவர்களுக்குமான சிறுவர்களுக்கு)

**மூன்று வயதுக்குட்பட்ட பாலகர்:** இரண்டு வயது முதல் மூன்று வயது வரையான பாலகர்களை மட்டுமே குறிக்கும்.

மூன்று வயதுக்கு மேற்பட்ட பாலகர்கள்: மூன்று வயது முதல் ஐந்து வயது வரையான பாலகர்களைக் குறிக்கும். பாலகர்களின் முதிர்ச்சி, தனித்துவமான வேறுபாடுகள் ஆகியவற்றிற் கவனஞ் செலுத்துதல் அவசியம்.

வருங்காலத்தில் 0-2 வயதுப் பாலகர்களுக்கு உகந்த செயற்பாடுகளைத் தயாரிக்க எண்ணுகிறோம்.

மயுரா குணசிங்க
அமரா அமரசிங்க

# நம் குழந்தைகள்

- **நம் அன்பை எதிர்பார்கின்றனர்:**

  - அவர்களை நம் மடிமேல் வைத்துத், தடவி, அவர்களுடன் அன்பாய்ப் பேசி அவர்கள் மீது நம் அன்பைத் தெரிவிப்போம்.
  - நமது ஓய்வு நேரத்ல் நம் குழந்தைகளை நமக்கு அருகே கொண்டுவந்து, அன்புடன் பேசி அவர்களுக்கு விருப்பமானது என்ன விருப்பமில்லாதது எதுவென்று அறிவோம்.

- **தம்மைக் கவனித்துக் கொள்ளுமாறு எதிர்பார்க்கிறார்கள்**

  - அவர்களை எப்போதும் கவனிப்போம்.
  - எதைப்பற்றியும் அவர்கள் பயப்படும் போது அவர்களை நமக்கு அருகே கொண்டு வந்து அவர்களது பயத்தைப் போக்க உதவுவோம்.
  - அவர்கள் நம்மீது நம்பிக்கை கொள்ளும் முறையில் நடந்து கொள்வோம்.

- **நமது கவனத்தை எதிர்பார்க்கின்றனர்**

  - அவர்கள் சொல்வதைக் கவனித்துக் கேட்போம்.
  - அவர்களுடைய கேள்விகட்கு மறுமொழி சொல்வோம்.
  - அவர்கள் சொல்வது நமக்குத் தெளிவாக விளங்குவதாக அவர்கள் உணரும் படி செய்வோம்.
  - அவர்களுடன் விளையாடுவோம்.
  - அவர்கள் சொல்வதையும் செய்வதையும் மதிப்போம்.

# நாம் நினைவில் வைக்க வேண்டியன

- **ஒரே வயதுடைய குழந்தைகளும் ஒரே மாதிரியானவர்களில்லை.**
- அவர்கள் பல விதங்களில் வித்தியாசமானவர்கள். (யோசிக்கிற விதங்களில், அலுவல்களைச் செய்கிற விதங்களில், நடந்துகொள்ளும் விதங்களில்).
- **அவதானிப்பதாலும் பரிசோதனை செய்வதாலும் விளையாட்டின் மூலம்** அவர்கள் கற்கிறார்கள்.
- பிற குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடியும் கதைத்தும் பாடியும் அவர்கள் பிறருடன் சேர்ந்து பழகக் கற்கிறார்கள்.
- குழந்தைகள் தமது பொழுதை மகிழ்வுடன் கழிக்க விரும்புகிறார்கள். (அவர்கள் மகிழ்ச்சியுடன் இருக்க, நாம் இயலுமான சகல வாய்ப்புக்களையும் கொடுப்போம்).
- நாம் காட்டுகிற **முன்மாதிரியைப் பின்பற்றியே குழந்தைகள் நல்ல பழக்கவழக்கங்களை பழகுகிறார்கள்.**
  (உதாரணமாக, மரியாதையாகப் பேசுவது, நல்லபடி நடப்பது, முறையாக வேலை செய்வது, பகிர்ந்து கொள்வது, உதவி செய்வது).

## குழந்தைகளுடன் வீட்டை அடிப்படையாகக் கொண்ட செயல் முறைகளில் ஈடுபடும் போது பின் வருவனவற்றை நினைவில் வைத்திருப்போம்

- நாம் **வீட்டிற் செய்கிற வேலைகளின் அடிப்படையில்,** குழந்தைகளை ஊக்கப்படுத்துகிற செயல்முறைகளைத் தெரிந்தெடுப்போம்.

- **ஒருநாளில் இரண்டுக்கு அதிகமான செயல்முறைகளில்** குழந்தைகளை ஈடுபடுத்த **வேண்டாம்.**

- குழந்தை தொடர்ந்தும் செய்ய விரும்பினால் இன்னும் **செயல்முறைகளை அறிமுகப்படுத்துவோம்.**

- வேலை செய்யும் போது அல்லது செய்து முடிந்த பிறகு அந்தச் செயல்முறைகள் பற்றிக் **குழந்தைகளுடன் கதைப்போம்.**

- குழந்தைகளுடைய திறமைகளுக்கும் வயதுக்கும் ஏற்ற விதமாக அவர்களுக்கான **செயல்முறைகளை ஒழுங்கு செய்வோம்.**

- குழந்தைகளை மேலும் மேலும் செயல்முறைகளில் வற்புறுத்தி ஈடுபடுத்தாமல் **அன்புடன் ஒரு சில செயல்முறைகளில் ஈடுபடுத்துவோம்.**

- அவர்கள் **எதையும் திருப்திகரமாகச் செய்யும் போதெல்லாம் பாராட்டுவோம்.**

- குழந்தை **செய்யத் தொடங்கிய வேலையை முடிக்கும்படி இனிமையான முறையில்** குழந்தையை **உற்சாகப்படுத்துவோம்.**

# பெற்றோர்களின் விழிப்புணர்ச்சிக்கான செயற் திட்டங்களை நடத்தும் போது, பயிற்றுனர்கள் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

## சந்திப்பு

- பெற்றோரை **ஒவ்வொருவராக** அல்லது (5 அல்லது 6 பேரைக் கொண்ட) சிறு குழுக்களாகச் சந்திக்கவும்.
- சந்திப்புக்கு **வசதியான இடமும் நேரமும் திகதியும் பற்றி முடிவு செய்த பின்** பெற்றோருக்கு **வேளைக்கே தெரிவிக்கவும்.**
- அவர்களுடன் நெருக்கமான உறவைப் பேணும் விதமாக, அவர்களுடைய பெயர்களை **அறிந்து அவர்களை அவர்களது பெயர்களால்** அல்லது அவர்கள் **அழைக்கப்பட விரும்பும் முறையில்** அவர்களை **அழைக்கவும்.**

## பேசுதல்

- உங்கள் கருத்துக்களை எளிமையான மொழியில் தெளிவாகச் சொல்லுங்கள்.
- பெற்றோரிடமிருந்து குழந்தைகள் ஏற்கனவே நிறையக் கற்றுவிட்டார்கள் என்றும் அவர்கள் **தங்கள் நாளாந்த வேலைகளைச் செய்கிற போதே இன்னும் அதிகம் கற்குமாறு தூண்டப்பட்டு உற்சாகப் படுத்தப்படலாம்** என்றும் அவர்கட்குத் தெரியப்படுத்துங்கள்.

## நம்பிக்கையைக் கட்டியெழுப்பல்

- பெற்றோரை நீங்கள் நம்புவதை அவர்கட்குத் தெரியப்படுத்தி அவர்கள் உங்களை நம்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுங்கள்.

### விளங்கப்படுத்தல்

- **அறிவையும் அனுபவத்தையும் நல்ல பழக்கங்களையும்** பெற்றோர் செய்யும் வீட்டு வேலைகள் மூலமே குழந்தைகள் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களைப் பெற்றோர் பயன்படுத்த உதவுவதே உங்களுடைய பங்கு என்று விளங்கப்படுத்துங்கள்.

- குழந்தைகள் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் சரியாகச் செய்ய முடியாது என்றும் எதையும் திரும்பத் திரும்பச் செய்தே தங்களது பிழைகளை அவர்கள் திருத்திக் கொள்கிறார்கள் என்றும் பெற்றோருக்கு விளங்கப்படுத்துங்கள்.

### கலந்தாலோசனை

- பெற்றோர் தமது குழந்தைகளுடன் அன்போடு பேசி, தடவி, அவர்கள் சொல்வதைக் கவனித்துக் கேட்டு அவர்கள் எப்படித் தங்கள் **அறிவையும் திறமைகளையும் நோக்கையும்** எவ்வாறு விருத்தி செய்கிறார்கள் என்று கவனித்துவரவேண்டிய தேவை பற்றிப் பெற்றோர்களுடன் கலந்து பேசுங்கள்.

### செய்து காட்டுதல்

- செயல் முறைகளைப் பெற்றோருக்குச் செய்து காட்டுவது அவசியமாகும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், அவசியமான பொருட்களைச் சேகரித்துப், பெற்றோருக்கு நடைமுறை அனுபவம் கிடைக்கும் விதமாக, ஒரு செயல் முறையைச் செய்து காட்டுங்கள்.

ஆரம்ப பிள்ளைப்பருவ விருத்திக்காக வீட்டை அடிப்படையாகக் கொண்ட செயல் முறைகள் அடங்கிய எட்டுச் சிறு நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இது அவற்றுள் ஒன்று.

## விருந்தினர் வரவு

நிலவரங்கள்

1. விருந்தினரை வரவேற்கும் போது
2. விருந்ததினரோடு இருந்து கதைக்கும் போது
3. குழந்தைகளுடன் விருந்தினர் வரும் போது
4. விருந்தினரை உபசரிக்கும் போது
5. விசேட விருந்தினர் வரும் போது
6. விருந்தினர் போகும் போது

# விருந்தினர் வரவு

## செயல்முறைகளின் அறிமுகம்

- விருந்தினரை வரவேற்பதன் மூலமும் அவர்களுடன் கதைப்பதன் மூலமும் அவர்கள் முன்பு நடந்து கொள்ளுகிற முறையின் மூலமும் குழந்தைகளை சமூகப் பழக்க முடையவர்களாக்கலாம். குழந்தைகளிடம் நல்ல பழக்கங்களை விருத்தி செய்ய இது பொருத்தமான தருணம்.

## கதைத்தல்

- தாம் வாழும் பகுதியில் எவர்களை விருந்தினராகக் கருதலாம் என்று பெற்றோர் முடிவு செய்வது பயனுள்ளது.
- பெரும்பாலும் அயல் வீடுகளில் உள்ள பெரியவர்களும் குழந்தைகளும் முறையான விருந்தினராகக் கருதப்படுவதில்லை. இதைக் குழந்தைகட்கு விளங்கப்படுத்த வேண்டும்.
- விருந்தினரை எப்படி வரவேற்பது, விருந்தினர் வருவதற்கு ஏற்ற நேரங்கள், அவர்களை உபசரிக்கும் முறை, அதில் குழந்தைகள் பங்கு பற்றக்கூடிய விதம் என்பன பற்றிக் கதையுங்கள்.

## விளங்கப்படுத்தல்

- விருந்தினரை வரவேற்கும் போது குழந்தைகளை மறக்கக் கூடாது என்றும் தமது வசதிக்கு ஏற்றபடி விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்றும் (குழந்தை பங்கிடும் பழக்கத்தை விருத்தி செய்யும் விதமாக) குழந்தைக்கு உணர்த்த வேண்டும் எனவும்.
- (குழந்தைகள் நல்ல பழக்கங்களும் பண்பான மொழியும் கற்று சமூகப்பழக்க முடையவர்களாக) விருந்தினருடன் மரியாதையாகப் பழகுவது அவசியம் எனவும் பெற்றோருக்கு விளங்கப்படுத்துங்கள்.

(இந்தப் புத்தகத்தில் உள்ள படங்களைப் பயன்படுத்துங்கள்)

### செய்து காட்டுதல்

(பாத்திரம் ஏற்று நடிப்பதன் மூலம்)

- விசேட விருந்தினரை வரவேற்பதிலும் அவர்களுடன் கதைக்கும் போதும் அவர்களை உபசரிக்கும் போதும் குழந்தைகளை ஈடுபடுத்தும் விதம்
- குழந்தைகளின் விளையாட்டுக்களில் குறுக்கிடாமல் பெற்றோர் பங்கு பற்றும் விதம் ஆகியவற்றைச் செய்து காட்டுங்கள்.

### கலந்துரையாடல்

- விருந்தினரை வரவேற்று உபசரிப்பது பற்றியும்.
- விருந்தினர் போகும் போது, அவர்களை வழியனுப்பும் விதம், அது அந்தப் பகுதியின் வழக்கத்துக்கு உடன்பாடானதா. அந்த நேரத்தில் குழந்தைகள் என்ன செய்ய வேண்டும் (எப்படி விருந்தினருடன் பழகுவது) என்பனவற்றைப் பற்றியும் பெற்றோருடன் கலந்துரையாடுங்கள்.

### பெற்றோரை ஊக்குவித்தல்

- புத்தகத்தில் உள்ள செயல் முறைகளைச் செய்து பார்த்துத் தமது எண்ணங்களைச் சொல்லும் படி பெற்றோரை ஊக்குவியுங்கள்.
- சந்திப்புக்களுக்கு வரும் தாய்மாரைத் தங்களிடையே நல்ல உறவைக் கட்டியெழுப்பும் படியும் தமது எண்ணங்களைப் பங்கிடும் படியும் ஊக்குவியுங்கள்.
- பயன்படக்கூடிய செயல்முறைகளை முன்வைக்கும் படி பெற்றோரை ஊக்குவியுங்கள்.



**கவனிக்க வேண்டியன:**

- ஒரே செயல்முறையின் **இருமட்டங்கள்** இரண்டு பக்கங்களில் தரப்பட்டுள்ளன.
- **இடதுபுறத்தில்** உள்ளவை **மூன்று வயதுக்கு உட்பட்ட** குழந்தைகட்குப் பொருத்தமானவை.
- **வலது புறத்தில்** உள்ளவை **மூன்று வயதுக்கு மேற்பட்ட** குழந்தைகட்குப் பொருத்தமானவை.
- குழந்தையின் முதிர்ச்சியின் அடிப்படையில் அவர்களது ஆற்றல் மதிப்பிட வேண்டும் என்பதால் **வயதின் அடிப்படையில் தீர்மானிக்க அவசியமில்லை.**

# விருந்தினர் வரவு 1

## விருந்தினரை வரவேற்கும் போது

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- விருந்தினரைக் கண்டவுடன், குழந்தையிடம் அங்கே உங்களுடைய மைத்துனர் / உங்களுடைய மாமி / உங்களுடைய மாமா வருகிறார்கள் என்று வந்தவர்களை அறிமுகப்படுத்துவோம். அவர்களை வரவேற்க ஆயத்தமாகுவோம்.

> * உறவினரை அடையாளம் காணுகிறது.
> * விருந்தினர் பற்றிய பயத்தை வெல்கிறது.

- இருந்த இடத்திலிருந்து குழந்தையுடன் எழும்பிப் போய் வந்தவர்களைச் சிரித்தமுகத்துடன் வரவேற்போம்.

> * விருந்தினரை வரவேற்றுப் பழகிறது.

- விருந்தினரிடம் மரியாதையாகக் கதைத்துக் கொண்டு (இவர் உங்களுடைய மைத்துனர். இவர் உங்கள் மாமி என்ற விதமாக) அவர்களைக் குழந்தைக்கு அறிமுகப்படுத்துவோம்.

> * மரியாதையாகக் கதைக்கப் பழகுகிறது.
> * விருந்தினர் பற்றிய பயத்தை இழக்கிறது.

# விருந்தினர் வரவு 1

## விருந்தினரை வரவேற்கும் போது

மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு

- விருந்தினர் வருவதைக் கண்டவுடனேயே அவர்களை வரவேற்க ஆயத்தமாகுவோம். அவர்களை அங்கே உங்களுடைய மைத்துனர், மாமா, மாமி, கோவில் பூசகர், மௌலவி, பாதிரியார், கிராம சேவகர் வருகிறார்கள்) என்ற விதமாக குழந்தைக்கு அறிமுகப்படுத்துவோம்.

> * விருந்தினர் / உறவினரை அடையாளம் காணுகிறது.

- இருந்த இடத்திலிருந்து எழும்பி சிரித்த முகத்துடன் குழந்தையோடு விருந்தினரை வரவேற்க வாசலுக்குப் போவோம்.

> * தாயின் முன்மாதிரியை பின் பற்றி, வந்தவர்களை வரவேற்கிறது.

- வந்தவர்களை மரியாதையாக வரவேற்றுக் குழந்தையையும் அவர்களை வரவேற்பதில் ஈடுபடுத்துவோம். அவர்கள் தூர இருந்து வந்திருந்தால் "களைத்துப்போயிருப்பீர்கள். உள்ளே வாருங்கள்" என்றோ, உறவினரென்றால் "மகனே/மகளே உங்கள் மைத்துனர் வந்திருக்கிறார்கள்" என்றோ சொல்லி வரவேற்போம்.

> * உறவினர் பற்றிய பயத்தை வெல்லுகிறது.
> * அவர்களிடம் மரியாதையாக நடந்து பழக்கப்படுகிறது.

# விருந்தினர் வரவு 1

## விருந்தினரை வரவேற்கும் போது

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- நம்மைக் காண வரும் மூத்தோர்/கோயில் பூசகர் / மௌலவி / பாதிரியார் கிராம சேவகர் போன்றவர்களுக்கு வந்தனஞ் சொல்லப் பழக்குவோம்.

> * நல்ல பழக்கமொன்றைப் பழகுகிறது.

- விருந்தினர்கள் இருப்பதற்குரிய இடத்தை ஆயத்தமாக்கும் போது குழந்தையிடம் அன்பாகக் கதைப்போம்.

> * விருந்தினரை நல்ல விதமாக வரவேற்கப் பழகுகிறது.

# விருந்தினர் வரவு 1

## விருந்திரை வரவேற்கும் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- மூத்தோர் / கோயில் பூசகர் / மௌலவி / பாதிரியார் / கிராமசேவகர் போன்றோருக்கு உரிய முறையில் வந்தனம் கூறி வரவேற்கும் படி குழந்தைக்குப் பழக்குவோம்.

  * நல்ல பழக்கங்களை வளர்க்கிறது
  * மூத்தோரை மரியாதை செய்ய பழகுகிறது.

- விறாந்தையிலோ வீட்டுக்குள்ளோ விருந்தினர் (குழந்தையோடு) இருப்பதற்கு ஒரு இடத்தை ஆயத்தப்படுத்தி அவர்களை உள்ளே கூப்பிடுவோம்.

  * விருந்தினரை வரவேற்கக் கற்கிறது.

# விருந்தினர் வரவு 2

## விருந்தினரோடு இருந்து கதைக்கும் போது

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- விருந்தினருக்காக இடமொன்றைத் துப்புரவு செய்யும் போது துப்புரவான இடத்தில் அமர வேண்டியது பற்றிக் குழந்தைக்கு நினைவூட்டுவோம்.

> * சுத்தமாயிருக்கப் பழகுகிறது.
> * விருந்தினரை மதிகப் பழகுகிறது

- சுற்றாடலிலிருந்து பெறப்பபட்ட மூலப்பொருட்களால் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருட்களுடன் விளையாடுவதற்குக் குழந்தைக்கு வழி காட்டுவோம்.

> * மூத்தோருடன் விளையாடுவதில் மகிழ்வடைகிறது

- குழந்தை தனக்குப் பிரியமான அல்லது தெரிந்த எவரையும் போலி செய்யும் போது குழந்தையுடன் சேர்ந்து மகிழ்ந்து கேள்வி கேட்போம்.

> * போலி செய்து விளையடுவதன் மூலம் தடையற்ற உரையாடலுக்குப் பழக்கப்படுகிறது.
> * பெற்றோரின் பங்குபற்றுதலால் மகிழ்வடைகிறது.

# விருந்தினர் வரவு 2

## விருந்தினரோடு இருந்து கதைக்கும் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- விருந்தினர் இருக்க இடத்தை ஆயத்தமாக்கும் போது அது துப்புரவானதா என்று பார்த்து அதைத் துப்புரவாக்கி விருந்தினரை மரியாதை செய்ய வேண்டும் என்று குழந்தைக்கு நினைவூட்டுவோம்.

> * சுத்தமாயிருந்து பழக்கப் படுகிறது.
>
> * விருந்தினரை நன்றாக நடத்தும் பழக்கத்தை விருத்தி செய்கிறது.

- விருந்தினரோடு கதைக்கும் போது குழந்தையை நம்முடன் வைத்திருப்போம் அல்லது நாம் காணக்கூடிய இடத்திலிருந்து விளையாட விடுவோம்.

> * விருந்தினரைக் குழப்பாமல் தனது அலுவல்களைச் செய்யப் பழக்கப்படுகிறது.
>
> * விருந்தினரோடு கதைத்துப் பழக்கப்படுகிறது.

- நம் கண்ணுக்குத் தெரியக்கூடிய இடத்திலிருந்து, தான் விரும்பியபடி குழந்தை விளையாட ஏற்பாடு செய்வோம்.

> * விருந்தினரைக் குழப்பாமல் விளையாடப் பழகுகிறது.

# விருந்தினர் வரவு 2

## விருந்தினரோடு இருந்து கதைக்கும் போது

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- விருந்தினருடன் சினேகமாகவும் மரியாதையாகவும் கதைப்போம்.

  * விருந்தினருடன் மரியாதையாகக் கதைக்கப் பழகுகிறது.

- குழந்தையை நாங்கள் கவனிக்கிறோம் என்று உணர்த்தக் குழந்தையுடன் இடையிடையே கதைப்போம்.

  * தாய் தன்னைக் கவனிப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறது.
  * தாயுடன் ஒரு பந்தத்தை ஏற்படுத்துகிறது.

- குழந்தையின் பெயர் சொல்லியோ செல்லமாகவோ குழந்தையுடன் கதைக்க விருந்தினருக்கு நினைவூட்டுவோம்.

  * ஏற்றுக் கொள்ளப்படுவதையிட்டு மகிழ்வடைகிறது

- விருந்தினர் தரும் அன்பளிப்பைப் பறித்து எடுக்காமல் சிரித்த முகத்துடன் பெறுவதற்குக்குழந்தையைப் பழக்குவோம்.

  * நல்ல சமூகப் பழக்கமொன்றை விருத்தி செய்கிறது.

# விருந்தினர் வரவு 2

## விருந்தினரோடு இருந்து கதைக்கும் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- விருந்தினருடன் சினேகமாகவும் மரியாதையாகவும் கதைப்போம். (அது குழந்தைக்கு உதாரணமாக இருக்கும்).

> * விருந்தினருடன் மரியாதையாகக் கதைக்கப் பழகுகிறது.

- குழந்தையுடன் இடையிடையே கதைப்போம்.

> * தாயுடன் நெருக்கமான உறவை விருத்தி செய்கிறது.

- (விருந்தினர் அயலாராகவோ உறவினராகவோ இருந்தால்) குழந்தையைப் பெயர் சொல்லியோ செல்லமாகவோ அழைக்கும்படி விருந்தினருக்கு நினைவூட்டுவோம்.

> * ஏற்றுக் கொள்ளப்படுவதில் மகிழ்வடைகிறது.
> * சமூகப் பழக்கம் பெறுகிறது.

- விருந்தினர் கொண்டுவரும் அன்பளிப்பைச் சிரித்த முகத்துடன் வாங்கி அவர்களுக்கு நன்றி கூறப் பழக்குவோம்.

> * நல்ல சமூகப் பழக்கமொன்றை விருத்தி செய்கிறது.

# விருந்தினர் வரவு 3

## குழந்தைகளுடன் விருந்தினர் வரும் போது

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- குழந்தையுடன் அன்பாகக் கதைத்து விருந்தினரோடு வரும் குழந்தைகளோடு விளையாடுமாறு ஊக்குவிப்போம். விளையாட்டில் பங்குபற்ற விரும்பாவிட்டால் மற்றக் குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்து உதவி செய்யும்படி ஊக்குவிப்போம்.

> * படிப்படியாகக் கூடி விளையாடிப் பழக்கப்படுகிறது.

- வந்திருக்கும் குழந்தைகளுடன் கதைத்து, அவர்களுடன் கூட இருந்து, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு மறுமொழி சொல்லும்படி குழந்தையை ஊக்குவிப்போம்.

> * கேட்ட கேள்விகளுக்கு மறுமொழி சொல்லப் பழகுகிறது.
> * வந்த பிள்ளைகளோடு விளையாடுகிறது.

- சுற்றாடலில் உள்ள விதைகள், இலைகள், பூக்கள், சிரட்டை போன்ற பொருட்களை வைத்து விளையாடும்படி குழந்தையை ஊக்குவிப்போம்.

> * சுற்றாடலில் இருந்து பெற்ற பெருட்களுடன் விளையாடிப் பழக்கப்படுகிறது.

# விருந்தினர் வரவு 3

## குழந்தைகளுடன் விருந்தினர் வரும் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- விருந்தினரோடு நாம் கதைக்கும் போது குழந்தை விளையாடச் சில பொருட்களைக் கொடுத்து விருந்தினரோடு வரும் குழந்தைகள் விளயாடுவதற்கு ஒரு இடத்தை ஒதுக்குவோம்.

> * சமுதாயத்துடன் பழக்கப்படுகிறது.
> * கூடி விளையாடுவதில் பங்கு பற்றுகிறது.

- வந்த குழந்தைகளோடு குழந்தை நன்றாகக் கூடி விளையாடுகிறதா என்று பார்ப்போம். அவர்களுடைய கேள்விகட்கு மறுமொழி சொல்லிக் காணுகிறவற்றைப்பற்றி அவர்களோடு கதைக்க உற்சாகப்படுத்துவோம்.

> * தன் வயதையொத்த குழந்தைகளோடும் பிற குழந்தைகளோடும் கதைக்கிறது.
> * கேள்விக்கு மறுமொழி சொல்லும் திறமையை விருத்தி செய்கிறது.

- விளையாட்டுப் பொருட்களையும் சுற்றாடலிலிருந்து பெற்ற மூலப்பொருட்களையும் பகிரும் படியும் அவை பற்றிக் கதைக்கும்படியும் குழந்தையை ஊக்குவிப்போம்.

> * பகிர்தல் என்ற நல்ல பழக்கத்தைப் பழகுகிறது.
> * சமுதாயத்துடன் பழக்கப்படுகிறது.
> * சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வை விருத்தி செய்கிறது.

# விருந்தினர் வரவு 3

## குழந்தைகளுடன் விருந்தினர் வரும் போது

### மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு

- குழந்தை மற்றக் குழந்தைகளிடமிருந்து விளையாட்டுப் பொருள்களைப் பறிக்கிறதா என்றும் அவர்களுடன் சண்டை பிடிக்காமல் விளையாடுகிறதா என்றும் இடையிடையே கவனித்துக் கொள்ளுவோம்.

    * கூடி விளையாடப் பழக்கப்படுகிறது.

- நமது குழந்தையுடனும் வந்துள்ள மற்றக் குழந்தைகளுடனும் அன்பாகக் கதைப்போம். நமது குழந்தையையும் அவர்களுடன் மரியாதையாகக் கதைக்க ஊக்குவிப்போம்.

    * மரியாதையாகக் கதைக்கப் பழகுகிறது.

- வீட்டுக்கு வந்த குழந்தைகள் சொல்லுகிற கதைகளைக் கேட்கும்படியும் அவர்கள் பாடும்போது தாளம் போடும்படியும் சேர்ந்து பாடும்படியும் குழந்தையை ஊக்குவிப்போம்.

    * பாடப் பழக்கப்படுகிறது.
    * மகிழ்ச்சியடைகிறது.

# விருந்தினர் வரவு 3

## குழந்தைகளுடன் விருந்தினர் வரும் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- வீட்டுக்கு வந்துள்ள குழந்தைகளுடன் விளையாடும் போதோ கதைக்கும் போதோ குழந்தை சண்டையிடாமல் இருக்கிறதா என்று அடிக்கடி கவனிப்போம்.

> * மற்றக் குழந்தைகளுடன் சினேகமான உறவை விருத்தி செய்கிறது
>
> * ஒரு குழுவாக வேலை செய்யப் பழகுகிறது.

- வந்த குழந்தைகளுடன் மரியாதையாகக் கதைத்து நம் குழந்தையையும் மரியாதையான முறையில் கதைக்கச் செய்வோம்.

> * மரியாதையாகக் கதைக்கும் நல்ல பழக்கத்தைப் பழகுகிறது.

- சேர்ந்து பாடும்பாடியும் விரும்பிய கதைகளை ஒருவருக்கு ஒருவர் சொல்லும்படியும் குழந்தையை ஊக்குவிப்போம்.

> * கூடி விளையாடுவதன் மூலம் பாடவும் கதை சொல்லவும் பழகுகிறது.

# விருந்தினர் வரவு 4

## விருந்தினரை உபசரிக்கும் போது

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- குழந்தையிடம் கிண்ணங்கள், கோப்பைகள், தட்டம் போன்றவற்றைக்காட்டி, விருந்தினரை உபசரிக்க ஆயத்தமாகும் போது அவைபற்றிக் குழந்தையுடன் கதைப்போம்.

> * விருந்தினரை உபசரிக்கப் பயன்படுவனவற்றை அடையாளம் காணுகிறது.

- பானத்தை ஊற்றும் போது (அதன் அளவு பற்றிக் குழந்தையிடம் கதைப்போம்.

  உதாரணமாக: கிண்ணம் / கோப்பை நிரம்பி உள்ளதா? இந்தக் கிண்ணம் / கோப்பை நிரம்பவில்லை.

> * அளவு பற்றி அடிப்படையான அனுபவம் பெறுகிறது.
> * அளவு பற்றி எண்ணங்களைக் கூறுகிறது.

# விருந்தினர் வரவு 4

## விருந்தினரை உபசரிக்கும் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- விருந்தினரை உபசரிக்க ஆயத்தப்படுத்த நாம் செய்யும் வேலைகள் பற்றிக் குழந்தையுடன் கதைப்போம்.

உதாரணம்:

* கிண்ணங்கள் கோப்பைகளைக் கழுவுதல்
* அவற்றைத் தட்டத்தில் அடுக்கல்
* பானங்கள் / தேனீர் ஊற்றுதல்
* போணிகள் / லோட்டாக்கள் எண்ணுதல்.

> * நல்ல சுகாதாரப் பழக்கமொன்றைப் பழகுகிறது.
> * செய்த வேலையை விவரிக்கப் பழகுகிறது.
> * கணித அனுபவம் ஒன்றைப் பெறுகிறது.

- ஊற்றப்பட்ட பானத்தின் அளவு பற்றிக் கவனித்துக் கதைக்கும்படி குழந்தைக்கு வழி காட்டுவோம்.

உதாரணம்:

* இக் கிண்ணத்தில் குறைய உள்ளது
* இக் கிண்ணத்தில் கூட உள்ளது
* இக் கிண்ணத்தில் தேநீர் குறைய
* பெரிய கிண்ணங்கள் பெரியவர்கட்கு
* சிறிய கிண்ணங்கள் சிறியவர்கட்கு

> * அளவு பற்றிக் (கணித) அனுபவமொன்றைப் பெறுகிறது.

# விருந்தினர் வரவு 4

## விருந்தினரை உபசரிக்கும் போது

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- கிண்ணங்கள் / கோப்பைகள் தட்டத்தில் எப்படி அடுக்கப்படுகின்றன என்று குழந்தைக்குக் காட்டுவோம். அது பற்றிக் குழந்தையிடம் கதைப்போம்.

  * கிண்ணம் / கோப்பை தட்டின் மேலுள்ளது.
  * தட்டு கோப்பைக்குக் கீழ் உள்ளது.

  * கணித அனுபவம் ஒன்றைப் பெறுகிறது.
  * விருந்தினரை உபசரிக்கப் பழகுகிறது.

- விருந்தினரை உபசரிக்கப் பாவித்த கலங்களைத் திரும்பவும் வைப்பதில் குழந்தையையும் ஈடுபடுத்துவோம்.

  * இரண்டு கைகளாலும் கவனமாகப் பிடித்து என்னிடம் கொண்டுவாருங்கள்.

  * தாய்க்கு உதவப் பழகுகிறது.
  * கவனமாக வேலை செய்து பழக்கப்படுகிறது.

# விருந்தினர் வரவு 4

## விருந்தினரை உபசரிக்கும் போது

### மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு

- கிண்ணங்கள் / கோப்பைகள் தட்டத்தின் மீது எவ்விதம் வைக்கப்பட்டுப் பரிமாறக் கொண்டு போகப்படுகின்றன என்று குழந்தையைக் காணச் செய்வோம். அது பற்றிக் குழந்தையுடன் கதைப்போம்.

  உதாரணம்:

  * கிண்ணம் தட்டத்தின் மேல் உள்ளது.
  * தட்டம் மேசைமேல் உள்ளது.
  * தட்டம் கிண்ணத்தின் கீழுள்ளது.

> * மேல்-கீழ் என்பன பற்றிய கணித அனுபவம் பெறுகிறது.
> * விருந்தினரை உபசரிக்கப் பழகுகிறது.

- பிரதேசத்தின் வழக்கங்களுக்கு ஏற்றபடி விருந்தினரை உபசரிப்பதில் குழந்தையை ஈடுபடுத்திக் குழந்தையிடம் அது பற்றிக் கதைப்போம்.

> * பிரதேசத்தின் வழக்கங்களுக்குப் பழக்கப்படுகிறது.

- நாம் உபசரிக்கப் பாவித்த கலங்களைக் கழுவிக் கவனமான முறையில் திருப்பி வைப்பதைக் கவனித்து வேலையில் ஈடுபடுவதன் மூலம் குழந்தை முறையாக வேலை செய்யும்படி பழக்குவோம்.

> * நல்ல பழக்கமொன்றை உண்டாக்குகிறது.
> * முறையாக வேலை செய்யப் பழகுகிறது.
> * உபதேசங்களைப் பின்பற்றுகிறது.

# விருந்தினர் வரவு 5

**விசேட விருந்தினர் வரும் போது**

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- மத குரு அல்லது வேறு விசேட விருந்தினர் எவரேனும் எவ்வாறு வரவேற்கப்படுகின்றனர் என்று குழந்தையை அவதானிக்கச் செய்து அவர்களை விசேட விருந்தினர் என்று அடையாளம் காணச் செய்வோம். அவர்களுடைய கனிவு, உடைகள் போன்றன பற்றிக் குழந்தை கேட்கக் கூடிய கேள்விகட்கு மறுமொழி சொல்லுவோம்.

> * உண்மைகளை அறியக் கேள்வி கேட்கும் பழக்கத்தை விருத்தி செய்கிறது.
>
> * விசேட விருந்தினர் பற்றிக் கதைக்கிறது.

- இந்த விருந்தினர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படுவதையும் அவர்களுடன் கதைக்கும் முறையையும் கவனிக்கக் குழந்தைக்கு வாய்ப்புக் கொடுப்போம். குழந்தையையும் அவர்களை வரவேற்கச் செய்வோம்.

> * பொறுமையாகக் கேட்டுப் பழகுகிறது.
>
> * மூத்தோர் காட்டிய வழியில் மதகுருமாரை மதிக்கப் பழகுகிறது.

# விருந்தினர் வரவு 5

## விசேட விருந்தினர் வரும் போது

### மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு

- குழந்தையை நமக்கு அருகில் இருக்கச் செய்து, மதகுரு அல்லது வேறு விசேட விருந்தினருக்கு விசேடமான ஆசனம் தயாரிக்கப்படுகிறது என்று கவனிக்கச் செய்வோம். (நாம் செய்வனவற்றிற்குக் குழந்தையை உதவச் செய்வோம்). குழந்தை அவர்களை அடையாளம் காண உதவுவோம்.

  உதாரணம்:

  * மத குரு அவருக்கு உரிய விதமான உடையை அணிந்திருப்பார்.

> * பொறுமையாகக் கேட்கப் பழகுகிறது.
> * மூத்தோர் காட்டிய வழியில் மதகுருமாரை மதிக்கப் பழகுகிறது.

- விசேட விருந்தினருடன் கதைக்கும் போது அதிகளவு அவதானம் தேவை என்று குழந்தைக்கு விளங்கும் விதமாக. அவர்களை வரவேற்பதில் குழந்தையையும் ஈடுபடுத்துவோம்.

  உதாரணம்:

  * மதகுருவுக்கு வணக்கம் செலுத்தி மரியாதையுடன் கதைப்போம்.
  * பாடசாலை ஆசிரியர் / கிராம சேவகருடன் மரியாதையாகவும் அக்கறையுடனும் கதைப்போம்.

> * விசேட விருந்தினர்களை வரவேற்பதில் அனுபவம் பெறுகிறது.
> * பெரியோரைப் பின்பற்றி மதகுருமாரை மதிக்கப் பழகுகிறது.

# விருந்தினர் வரவு 5

## விசேட விருந்தினர் வரும் போது

### மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு

- வீட்டுக்கு வந்த விசேட விருந்தினர் பற்றிக் குழந்தைக்கு என்ன நினைவிலிருக்கிறது என்று கேட்போம். குழந்தை அவதானித்ததை நினைவுக்குக் கொண்டு வர உதவுவோம்.

> * கண்டதை நினைவில் கொள்ளவும் சொற்களில் கூறவும் பழகுகிறது.

- விசேட விருந்தினரைக் குழந்தை வேறு எங்காவது கண்டால் அவர்களை அடையாளம் காணுவதற்கு உதவுவோம்.

> * விருந்தினரை அடையாளம் காணுகிறது.
> * நல்ல பழக்கமொன்றை வளர்க்கிறது.

# விருந்தினர் வரவு 5

## விசேட விருந்தினர் வரும் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- விசேட விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்ட விதம்பற்றிக் குழந்தைக்கு நினைவில் இருப்பதைத் தடையில்லாமல் சொல்லும்படி குழந்தையை ஊக்கப்படுத்துவோம்.

> * நினைவுக்குக் கொண்டு வந்ததைப் பற்றிய பயிற்சியையும் அனுபவத்தையும் மேம்படுத்துகிறது.

- குழந்தையின் விளையாட்டின் போது, வீட்டில் உள்ள மூத்தோர் எவ்வாறு மரியாதையுடன் கதைக்கின்றனர் என்று பாவனை செய்ய அனுமதிப்போம்.

  உதாரணம்:

  * விருந்தினரை வரவேற்றல்
  * விருந்தினரை உபசரித்தல்
  * மரியாதையாகக் கதைத்தல்

(குழந்தை செய்வதை மதித்துக் குழந்தையைப் பாராட்டுவோம்)

> * நல்ல பழக்கங்களை விருத்தி செய்கிறது.
> * மரியாதையாகக் கதைக்கப் பழகுகிறது.

# விருந்தினர் வரவு 6

## விருந்தினர் போகும் போது

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- விருந்தினர் போகும் முன்பு நாங்கள் அவர்களுடன் கனிவாகக் கதைத்து வழியனுப்பும் போது குழந்தையையும் நம்முடன் சேரவைப்போம்.

  உதாரணம்:

  "இனி எப்போது வருவீர்கள்? தயவு செய்து வாருங்கள்" என்று கூறுவோம்.

  * நல்ல சமூகப் பழக்கங்களைப் பழகுகிறது.

- விருந்தினரது நல்ல இயல்பு எதையாவது பற்றிக் கதைப்போம். அவர்களைப் பற்றிக் கூடாத விதமாகக் கதைப்பதை தவிர்ப்போம்.

  "வந்தவர் ஒரு மிகவும் நல்ல மாமி இல்லையா?"

  * விருந்தினர் வருவதை உவக்கப் பழகுகிறது.

# விருந்தினர் வரவு 6

## விருந்தினர் போகும் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- விருந்தினருடன் கனிவாகக் கதைத்து அவர்கள் போகும் முன்பு விடை கூற குழந்தைக்குப் பழக்குவோம்.

உதாரணம்:

"போய் வாருங்கள்"

| * நல்ல சமூகப் பழக்கங்களைப் பழகுகிறது. |
|---|

- விருந்தினர் வருவதை நாம் மிகவும் உவக்கிறோம் என்றும் குழந்தைகட்குத் தெரிவுபடுத்துவோம். வீட்டிற்கு வந்த விருந்தினர் பற்றி கூடாத விதமாகப் பேசுவதைத் தவிர்ப்போம். (ஏனென்றால் அப்பேச்சு குழந்தைக்கு ஒரு பிரச்சினையை ஏற்படுத்தும்).

| * விருந்தினரை உவக்கப் பழகுகிறது |
|---|

# விருந்தினர் வரவு 6

## விருந்தினர் போகும் போது

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- விருந்தினரை நாங்கள் நடத்தும் கனிவான முறையிலேயே மற்றக் குழந்தைகளுடன் நமது குழந்தையும் நட்புறவைப் பேண வழி காட்டுவோம்.

> * சமுதாய வாழ்வுக்கு பழக்கப்படுகிறது.
> * கனிவாகக் கதைக்கப் பழகுகிறது.

- விருந்தினர் புறப்பட ஆயத்தமாகும் போது நாம் நமது இருக்கையிலிருந்து எழுந்து நின்று அவர்களுடன் கதைக்கும் வேளை. குழந்தையையும் நமக்கு அருகே வரவழைப்போம். விருந்தினருடன் வெளிப்படலைவரை சென்று வழியனுப்புவோம். இது குழந்தைக்கு ஒரு உதாரணமாக அமையட்டும்.

> * முன்னுதாரணம் மூலம் மற்றோரை மதிக்கப் பழகுகிறது.
> * விருந்தினருடன் சேரப் பழகுகிறது.

# விருந்தினர் வரவு 6

## விருந்தினர் போகும் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- விருந்தினருடன் நாம் சினேகிதமாகவும் கனிவாகவும் நடப்பது போலவே குழந்தையையும் மற்றக் குழந்தைகளுடன் நட்புறவைப் பேண வழிகாட்டுவோம்.

  * நல்ல முறையில் சமூகப் பழக்கம் பெறுகிறது.
  * சினேகமான முறையில் பேசப் பழகிக் கொள்கிறது.

- விருந்தினர் போக ஆயத்தமாகும் போது எழுந்து நின்று சினேகமான முறையில் கதைத்து அவர்களை மீண்டும் வரும்படி அழைப்பதற்குக் குழந்தைக்குப் பழக்குவோம். அவர்களுடன் வெளிப்படலைவரை சென்று வழியனுப்புவோம்.

  * நல்ல பழக்கங்களை விருத்தி செய்கிறது.
  * நல்ல சமூக நோக்கை விருத்தி செய்கிறது.